DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**STC. No.362/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW1 | Caste | : | |
| Name | : | ராஜேந்திரன் | Age | : | 60 |
| Father's Name | : | சீனிவாசன் | Occupation | : | விவசாயம் |
| Village | : | | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 22nd day of September 2022.

22.09.2022.

**முதல் விசாரணை** :

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(கடந்த 17.12.2018- ந் தேதியிட்ட பேரளம் ICICI வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் 953460 என்ற எண் கொண்ட ரூ. 6,00,000/-த்திற்கு எதிரி எனது பெயருக்கு வழங்கிய காசோலை அசல் ம.சா.ஆ. 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 17.12.2018-ந் தேதியிட்ட நான் கணக்கு வைத்துள்ள கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி பேரளம் கிளையில் எதிரி கொடுத்த காசோலையை நான் கலெக்சனுக்கு செலுத்தியதற்கான ரசீது அசல் ம.சா.ஆ. 02 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 20.12.2018- ந் தேதியிட்ட மேற்படி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி பேரளம் கிளையில் நான் கலெக்சனுக்கு செலுத்திய காசோலை பொறுத்து எதிரியின் வங்கி கணக்கில்**

**" போதிய பணமில்லை (Funds insufficient) " என்ற குறிப்புடன் எனக்கு வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 03 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 10.01.2019- ந் தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலம் பணத்தை திருப்பி தர வேண்டி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 04 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 16.01.2019-ந் தேதியிட்ட நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்ட தபால் கவர் அசல் ம.சா.ஆ- 05 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

நான் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். மேற்படி கட்சியில் பேரளம் நகர செயலாளராக பொறுப்பு வகித்து வருகிறேன். 2017-ம் வருடமும் நகர செயலாளராக தான் பொறுப்பில் இருந்தேன். எதிரி பாவட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 2017-ல் எதிரி மேற்படி பொறுப்பில் இருந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு எத்தனை வங்கி கணக்கு உள்ளது என்றால் பேரளம் ICICI வங்கி மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி பேரளம் கிளையிலும் கணக்கு உள்ளது. வேறு எங்கும் எனக்கு வங்கி கணக்கு இல்லை. 20.05.2017 முதல் 20.07.2017 வரையிலான வங்கி கணக்கின் பரிவர்த்தனை பட்டியல் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எதிரிக்கு கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 20.06.2017-ல் எதிரிக்கு கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி கணக்கு செலுத்துவது இல்லை. கட்சியில் நடைபெறும் கூட்டங்களுக்கு எங்கள் பகுதியில் நிதி வசூல் செய்யும்

பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. 2017-ம் ஆண்டில் அவ்வாறு நிதி வசூல் செய்யும் போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவராக இருப்பதால் எதிரியிடம் ரூ.10,000/- நிதி கேட்டதற்கு எதிரி தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை இல்லை என்ற காரணத்தினால் எதிரியால் வழங்கப்பட்ட நிரப்பப்படாத காசோலையை தவறாக பூர்த்தி செய்து எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். காசோலையில் எண்ணாலும், எழுத்தாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது யாருடைய கையெழுத்து என்றால் எதிரி அவரது நண்பரை அழைத்து வந்தார், அவர் தான் பூர்த்தி செய்து கொடுத்தார். மேற்படி விபரத்தை மனுவிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரத்தை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எதிரி கொடுத்த நிரப்பப்படாத காசோலையை தவறாக பூர்த்தி செய்து எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு என்ன காரணத்தினால் சார்வு செய்யப்படவில்லை என்றால் எதிரி வாங்க மறுத்ததாக என்று திருப்பப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு இல்லை என்றாலும், எதிரியின் சரியான முகவரிக்கு மேற்படி அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 5 ஆவணத்தில் எதிரியின் முகவரியில் கதவு எண். 6-41C என்று குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எதிரியின் கதவு எண். 387 என்றாலும், அதற்கு அனுப்பாமல் தவறான விலாசத்திற்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. அதன் காரணமாக தான் எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்படவில்லை என்றாலும், அதனால் எதிரியால் பதிலறிவிப்பு கொடுக்க இயலவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிலும் எதிரியின் முகவரி தவறாகதான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அதன் பேரில் நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு

அனுப்பப்பட்ட அறிவிப்பு தவறான விலாசத்திற்கு சென்று விட்டதாலும், அந்த நபர் எதிரியிடம் சொன்னதன் அடிப்படையில் தான் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றாலும் சரியல்ல. நான் 20.06.2017-ல் எதிரிக்கு ரூ.6,00,000/- கடனாக கொடுத்ததாக சொல்வதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிரிக்கு மேற்படி தேதியில் ரூ.6,00,000/- கடனாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி 17.12.2018-ல் தொகை மற்றும் பெயர் பூர்த்தி செய்து காசோலை கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எக்காலத்திலும் என்னிடம் கடன் தொகை பெறவில்லை என்றாலும் சரியல்ல. காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை சட்டப்படியாக வசூல் செய்யக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த நிரப்பப்படாத காசோலையை தவறாக பயன்படுத்தி வங்கி கலெக்சனுக்கு செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி காசோலை மோசடி செய்யவில்லை என்றாலும், எதிரி குற்றவாளி இல்லை என்றாலும், நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.